பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**25 05 2026** **6 45**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நடப்பாண்டுக்கான பத்ம விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று வழங்குகிறார்.

**2.** இந்தியாவும் - அமெரிக்காவும் பயங்கரவாத செயல்களுக்கு எதிரான ஒரே நிலைப்பாட்டை கொண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

**3.** காவிரி, பொன்னியாறு, திருமணிமுத்தாறு ஆகிய நதிகளை இணைப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

**4.** கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல் குறித்த அறிவிப்பு, விரைவில் வெளியிடப்படும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. காந்திராஜ் தெரிவித்துள்ளார்.

**5.** கோவை, திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில் ஒருசில இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நடப்பாண்டுக்கான பத்ம விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று வழங்குகிறார்.

புதுதில்லியில் உள்ள குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெறும் விழாவில் குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உள்ளிட்ட பலர் பங்கேற்கின்றனர்.

பத்ம விபூஷன் விருது **5** பேருக்கும், பத்ம பூஷன் விருது **13** பேருக்கும், பத்மஸ்ரீ விருது **113** பேருக்கும் என மொத்தம் **131** பேருக்கு வழங்கப்படுகிறது.

இதில் முதற்கட்டமாக **66** பேருக்கு இன்று பத்ம விருதுகளை குடியரசுத்தலைவர் வழங்குகிறார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த **7** பேருக்கு இந்த ஆண்டிற்கான பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

டாக்டர் கலிங்கப்பட்டி ராமசாமி பழனிச்சாமிக்கு பத்ம விபூஷன் விருதும், டாக்டர் ஹெச்.வி. ஹண்டே, திரு. கே. விஜயகுமார், திருமதி

சிவசங்கரி, டாக்டர் ஸ்ரீதர், திரு. என். சுவாமிநாதன், திரு. ஆர். கிருஷ்ணன் கிட்னா ஆகியோருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்படுகிறது.

<<<<>>>>

பயங்கரவாதச் செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதில், இந்தியாவும் - அமெரிக்காவும் வலுவான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், இரு நாடுகளும் பயங்கரவாத செயல்களை ஒருபோதும் சகித்துக்கொள்ள முடியாது என்ற நிலைப்பாட்டை கொண்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

உலகளவிலான பொருளாதார சிக்கல்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளில் இரு நாடுகளும் அக்கறையுடன் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பல்வேறு துறைகளில் இந்தியாவும் - அமெரிக்காவும் இணைந்து செயல்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாக திரு. ஜெய்சங்கர் கூறினார்.

<<<<>>>>

காவிரி, பொன்னியாறு, திருமணிமுத்தாறு ஆகிய நதிகளை இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நதிகளை இணைப்பது குறித்தும், இதற்கான வழித்தடங்கள் குறித்தும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் விவசாய சங்கப் பிரதிநிதிகள் மற்றும் துறைசார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தியதாக கூறினார்.

மேட்டூர் அணையில் இருந்து வெளியேறும் உபரி நீரை இந்த நதிகளுடன் இணைப்பதன் மூலம் இப்பகுதியில் உள்ள ஏரிகளில் தண்ணீரை சேமிக்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

மேலும் திருச்செங்கோடு சட்டப்பேரவைத் தொகுதியில் மக்கள் தங்களது குறைகளை எளிதில் தெரிவிக்க ஏதுவாக ‘‘நம்ம திருசெங்கோடு - நம்ம சட்டப்பேரவை உறுப்பினர்’’ என்ற பிரத்யேக செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் திரு. அருண்ராஜ் தெரிவித்தார்.

<<<<>>>>

கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல் குறித்த அறிவிப்பு, முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி விரைவில் வெளியிடப்படும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. காந்திராஜ் தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டம் வேப்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், மக்கள் ஆதரவுடன் தவெக வெற்றி பெற்று ஆட்சியமைத்துள்ளதாகவும், இதனை ரீல்ஸ் ஆட்சி என விமர்சனம் செய்வது முறையல்ல என்றும் கூறினார்.

மின்வெட்டு பாதிப்புகளை உடனுக்குடன் சீரமைக்கும் வகையில் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இம்மாவட்டத்திற்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் முழுமையாக நிறைவேற்றப்படும் என்று அமைச்சர் திரு. காந்திராஜ் கூறினார்.

<<<<>>>>

பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பில் தமிழக அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்தை அடுத்த வண்டிப்பாளையம் பகுதியில் 11 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக வெளியாகி உள்ள செய்திகள் அதிர்ச்சியளிப்பதாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

குழந்தைகள் என்று கருதாமல் இதுபோன்ற கொடுஞ்செயல்களில் ஈடுபடுபவர்களை ஒருபோதும் மன்னிக்க முடியாது என்று திரு. அன்புமணி ராமதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில், கோவை, திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் ஒருசில இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில், அடுத்த மூன்று தினங்களுக்கு அதிகபட்ச வெப்ப நிலை இயல்பைக் காட்டிலும் இரண்டு டிகிரி செல்சியஸ் வரை குறையக்கூடும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், மாலை அல்லது இரவு

நேரங்களில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதனிடையே, நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் நேற்று பெய்த பலத்த மழை காரணமாக, ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Kannan — 33 Sec)**

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில், கோடை வெப்பம் 100 டிகிரி எட்டிய நிலையில், ஒருமணி நேரம் பெய்த கனமழை காரணமாக, அப்பகுதி மக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடியில், சூறைக்காற்றுடன் பெய்த ஆலங்கட்டி மழை காரணமாக, அப்பகுதிகளில் மின்தடை ஏற்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Anuradha — 28 Sec)**

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஃபிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலா அருகே கட்டுமானத்தில் இருந்த அடுக்கு மாடிக் கட்டிடம் இடிந்து விழுந்த விபத்தில் இடிபாடுகளில் சிக்கியிருந்த 24 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

--------------

காங்கோவின் கிழக்குப் பகுதியில், எபோலா வைரஸால் பாதிப்புக்குள்ளானோரின் எண்ணிக்கை **900**ஐ கடந்துள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

--------------

யுக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் **2** பேர் உயிரிழந்தனர்.

--------------

இம்மாதம் **28**ஆம் தேதி நடைபெறுவதாக இருந்த பல்கலைக்கழகங்களுக்கான பொது நுழைவுத் தேர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

--------------

நாடு முழுவதும் **83** நகரங்களில், **2** ஆயிரத்திற்கும் மேற்பட்ட மையங்களில் நேற்று நடைபெற்ற மத்திய பணியாளர் தேர்வாணைய முதன்மைத் தேர்வில், **5** லட்சத்து **49** ஆயிரம் பேர் தேர்வு எழுதினர்.

--------------

பிளஸ் டூ மாணவர்கள் விடைத்தாள் பிரதிகளைப் பெறுவதற்கான கடைசித் தேதி இன்று வரை நீட்டிக்கப்படுவதாக மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் தெரிவித்துள்ளது.

--------------

தேனி மாவட்டத்தில், இம்மாதம் 27-ம் தேதி நடைபெறவுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்புக் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்துகொண்டு பயனடையுமாறு ஆட்சியர் திரு ரஞ்சித் சிங் தெரிவித்துள்ளார்.

--------------

ராணிப்பேட்டை மாவட்டத்தில், மக்களிடையே ஒற்றுமை மற்றும் உடற்தகுதியை வலியுறுத்தி, ஆயிரத்திற்கும் மேற்பட்ட மத்திய தொழில் பாதுகாப்புப் படை வீரர்கள் சைக்கிள் பயணம் மேற்கொண்டனர்.

--------------

ஏழைகளின் ஊட்டி என்றழைக்கப்படும் ஏற்காட்டில் நடைபெற்று வரும் கோடை விழாவின் ஒருபகுதியாக, கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் நாய்கள் கண்காட்சி நடைபெற்றது.

--------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில், ராஜஸ்தான் அணி 30 ரன் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

மும்பையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், முதலில் ஆடிய ராஜஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 205 ரன் எடுத்தது.

206 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய மும்பை அணி 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 175 ரன் எடுத்தது.

மற்றொரு ஆட்டத்தில், தில்லி அணி 40 ரன் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வென்றது.

கொல்கத்தாவில் நேற்றிரவு நடைபெற்ற போட்டியில், முதலில் ஆடிய தில்லி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 203 ரன் எடுத்தது.

204 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய கொல்கத்தா அணி 18 புள்ளி 4 ஓவரில் 163 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**<<<<The End>>>>**